# இரண்டாம் திருப்புதல் தேர்வு - 2020

**வகுப்பு 12** பதிவெண் | | | | | | |

நேரம்: 3.00 மணி **வணிகவியல்** மொத்த மதிப்பெண்கள்: 90

பகுதி - I **20×1=20**

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

1) பரந்த அளவு வீச்செல்லையில் அதிகாரப்படி நிலைமட்டங்களின் அளவு ..............
அ) அதிகம் ஆ) குறைவு இ) பன்மடங்கு ஈ) கூடுதல்

2) .............. முறை தனிப்பட்ட வலிமை மற்றும் பொறுப்பிற்கு முழுவடிவம் கொடுக்கிறது.
அ) குறியிலக்கு மேலாண்மை ஆ) விதிவிலக்கு மேலாண்மை
இ) முதுகலை வணிக மேலாண்மை ஈ) முதுகலை வணிக நிர்வாகம்

3) மூலதனச் சந்தை என்பது ஒரு .............. சந்தையாகும்.
அ) குறுகிய கால நிதி ஆ) நடுத்தர கால நிதி
இ) நீண்ட கால நிதி ஈ) இவை அனைத்தும்

4) வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும், விற்பதற்குமான சந்தையை .............. என அழைக்கலாம்.
அ) வணிகத்தாள் சந்தை ஆ) கருவூல இரசீது சந்தை
இ) வணிக இரசீது சந்தை ஈ) மூலதனச் சந்தை

5) விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை பங்குச் சந்தைக்காக ஏற்படுத்தி தரும் அமைப்பு .............. ஆகும்.
அ) ரிசர்வ் வங்கி ஆ) மத்திய அரசு இ) செபி ஈ) மும்பை பங்குச் சந்தை

6) பணியாளர் சுழற்சி வீதம் என்பது நிறுவனத்தில் பணியாளர்களின் நிலை .............. பொழுது ஏற்படுகிறது.
அ) நிறுவனத்திற்கு உள்ளே வரும் ஆ) நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும்
இ) சம்பள பிரச்சனையின் ஈ) மேலே குறிப்பிட்ட ஏதுமில்லை

7) ஆட்சேர்ப்பு என்பது .............. அடையாளம் காண்பதற்கான செயல்முறை ஆகும்.
அ) சரியான வேலைக்கு சரியான நபர் ஆ) நன்கு செயலாக்குபவர்
இ) சரியான நபர் ஈ) மேலே குறிப்பிட்ட எதுவுமில்லை

8) பயிற்சி முறைகளை .............. என் வகைப்படுத்தலாம்.
அ) வேலை சுழற்சி மற்றும் வேலை செறிவூட்டல்
ஆ) பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி
இ) வேலை பகுப்பாய்வு மற்றும் வேலை வடிவமைப்பு
ஈ) உடல் மற்றும் மனம்

9) சந்தையிடுகையில் சந்தையிடுகையாளர் முதலில் தெரிந்து கொள்ள விரும்புவது
அ) வாடிக்கையாளரின் தகுதி ஆ) பொருளின் தரம்
இ) வாடிக்கையாளரின் பின்புலம் ஈ) வாடிக்கையாளரின் தேவைகள்

10) கீழ்கொடுக்கப்பட்டுள்ள கூறுகளில் சந்தையிடுகை கலவைக்கு தொடர்பு இல்லாத கூறு எது?
அ) இடக்கூறு ஆ) பொருள் கூறு இ) திட்டக்கூறு ஈ) விலை கூறு

11) சமூக சந்தைப்படுத்தல் என்பது .............. உடன் தொடர்புடையது.
அ) சமூகம் ஆ) சமூக வகுப்பு இ) சமூக மாற்றம் ஈ) சமூக தீமை

12) நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
அ) 1-1-1986 ஆ) 1-4-1986 இ) 15-4-1987 ஈ) 15-4-1990

13) வணிகத்தின் பரந்த சூழல் .............. காரணியாகும்.
அ) கட்டுப்படுத்த முடியாது ஆ) கட்டுப்பாட்டிற்குட்பட்டது
இ) சமாளிக்க கூடியது ஈ) சமாளிக்க முடியாதது

14) புதிய பொருளாதார கொள்கை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு
அ) 1980 ஆ) 1991 இ) 2013 ஈ) 2015

15) சரக்கு விற்பனை ஒப்பந்தத்திற்கு எது முக்கிய உறுப்பாக இருக்கிறது?
அ) இருதரப்பினர் ஆ) சொத்துரிமை மாற்றம் இ) விலை ஈ) அனைத்தும்

16) காசோலை வெளியிட்ட நாளிலிருந்து ........... மாதங்களுக்குப் பிறகு காலாவதி ஆகிறது.
அ) 3 ஆ) 4 இ) 6 ஈ) 1

17) கூட்டுப்பங்கு தொழில் முனைவோரின் வேறுபெயர்
அ) அகத்தொழில் முனைவோர் ஆ) தோற்றுவிப்பாளர் இ) மேலாளர் ஈ) பங்குநர்

18) கீழ்கண்ட பங்குகளில் எது முந்தைய பங்குதாரர்களின் துணைகொண்டு நிறுமத்தின் முதலை உயர்த்துவதற்காக வெளியிடப்படுகிறது?
அ) சாதாரணப் பங்குகள் ஆ) உரிமைப் பங்குகள்
இ) முன்னுரிமைப் பங்குகள் ஈ) ஊக்கப் பங்குகள்

19) நிறுமச்சட்டம் 2013ன் படி ஒரு நபர் இயக்குநராக .......... நிறுமங்களில் பதவி வகிக்கலாம்.
அ) 5 ஆ) 10 இ) 20 ஈ) 15

20) நிறுமம் பதிவு செய்யப்பட்ட நாளிலிருந்து .............. மாதங்களுக்குள் முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
அ) 12 ஆ) 15 இ) 18 ஈ) 21

## பகுதி - II

குறிப்பு: **ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 30 கட்டாய வினாவாகும். ஒவ்வொரு விடையும் 50 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.** **7×2=14**

21) குறியிலக்கு மேலாண்மைக்கு வரைவிலக்கணம் தருக.
22) நிதிச்சந்தை - சிறுகுறிப்பு வரைக.
23) செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.
24) அகவள ஆட்சேர்ப்பின் ஏதேனும் இரண்டு நன்மைகளைக் கூறுக.
25) பொருட்கள் சந்தை என்றால் என்ன?
26) ''வாங்குவோர் ஜாக்கிரதை'' என்றால் என்ன?
27) உட்புறச்சூழல் என்றால் என்ன?
28) நம்புறுதி என்றால் என்ன?
29) தொழில் முனைவோரின் மேலாண்மைப் பணிகளை பட்டியலிடுக.
30) தீர்மானம் என்றால் என்ன?

## பகுதி - III

குறிப்பு: **ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 கட்டாய வினாவாகும். ஒவ்வொரு வினாவிற்கான விடையும் 150 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.** **7×3=21**

31) மேலாண்மை மற்றும் நிர்வாகம் வேறுபடுத்துக.
32) மூலதனச் சந்தையின் வகைகளை விளக்குக.
33) காளை மற்றும் கரடி - விளக்குக.
34) மனிதவள மேலாண்மையின் பணிகள் யாவை?
35) சந்தையிடுகை கலவை பற்றி நீவிர் அறிவது யாது? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும்.
36) மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் அதிகார எல்லைகள் யாவை?
37) வியாபாரத்தின் மூன்று சுற்றுச்சூழல் காரணிகளை விளக்குக.
38) எப்போது விலைபெறா வணிகர் வாங்குநரின் மீது தனிப்பட்ட முறையில் வழக்கு தொடுக்கலாம்?
39) வேளாண் தொழில் முனைவோரைப் பற்றி சுருக்கமாக எழுதுக.
40) இயக்குநர் ஒருவர் தகவலறிக்கையில் தவறான தகவல்களை அளிப்பது எத்தகைய பொறுப்பாகும்? அதற்கான தண்டனைகள் யாவை?

## பகுதி - IV

குறிப்பு: **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **7×5=35**
**ஒவ்வொரு வினாவிற்கான விடையும் 250 வார்த்தைகளுக்கு மிகாமல்** எழுத வேண்டும்.

41) மேலாண்மையின் முக்கிய பணிகளை கூறி விளக்குக. **(அல்லது)**
முதல்நிலைச் சந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.

42) பங்குமாற்றகங்களின் சிறப்பியல்புகளை விவரி. **(அல்லது)**
ஆட்சேர்ப்பின் அகவளங்கள் ஏதேனும் ஐந்தினை விவரி.

43) சந்தையிடுகைக் கலவையின் கூறுகளை சுருக்கமாக எழுதுக. **(அல்லது)**
தாராளமயமாக்கலின் நன்மைகளை விளக்குக.

44) காசோலையின் இயல்புகளை விளக்குக. **(அல்லது)**
வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்குக.

45) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்குக. **(அல்லது)**
பணிசார் தொழில் முனைவோரின் தன்மையை விவரி.

46) அரசின் ஏதேனும் ஐந்து தொழில்முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக. **(அல்லது)**
கடன் பத்திரங்களுக்கும், பங்குகளுக்குமான வேறுபாடுகள் தருக.

47) இயக்குநர்களின் அதிகாரங்கள் யாவை? **(அல்லது)**
பல்வகையான நிறுமக் கூட்டங்களை விளக்குக.

----------

# காஞ்சிபுரம் மாவட்டம்

## 12 - ஆம் வகுப்பு வணிகவியல் - விடைக் குறிப்பு

## இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2020

| சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுதல். | | 15 X 1 = 15 |
|---|---|---|
| 1 | ஆ | குறைவு |
| 2 | அ | குறியிலக்க மேலாண்மை |
| 3 | இ | நீண்டகால நிதி |
| 4 | இ | வணிக இரசீது சந்தை |
| 5 | இ | செபி |
| 6 | ஆ | நிறுவனத்தை விட்டு வெளியே செல்லும் |
| 7 | அ | சரியான வேலைக்கு சரியான நபர் |
| 8 | ஆ | பணிவழி மற்றும் பணிவழியற்ற பயிற்சி |
| 9 | ஈ | வாடிக்கையாளரின் தேவைகள் |
| 10 | இ | திட்டக்கூறு |
| 11 | இ | சமூக மாற்றம் |
| 12 | இ | 15 - 4 - 1987 |
| 13 | அ | கட்டுப்படுத்த முடியாது |
| 14 | ஆ | 1991 |
| 15 | ஈ | அனைத்தும் |
| 16 | அ | 3 |
| 17 | ஆ | தோற்றுவிப்பாளர் |
| 18 | ஆ | உரிமைப் பங்குகள் |
| 19 | இ | 20 |
| 20 | இ | 18 |

### பகுதி - II

**21. குறியிலக்கு மேலாண்மைக்கு வரைவிலக்கணம் தருக.**

- ஜோர்ஜ் ஒடியோர்ன் எனபவரின் கூற்றின்படி, "குறியிலக்கு மேலாண்மை என்பது, ஒரு நிர்வாக முறையாகும். ஒரு நிறுவனத்தின் உயர்நிலையில் மற்றும் கீழ்நிலையில் உள்ள மேலாளர்கள் கூட்டாக இணைந்து, அதன் பொதுவான குறிகோள்களை அடையாளம் கண்டு, எதிர்பார்க்கும் முடிவின் அடிபடையில், ஒவ்வொரு நபரின் முக்கிய செயல் பகுதியையும் பொறுப்புணர்வையும் அளவிட்டு, செயல் பகுதியின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பையும் மதிப்பிடுவது ஆகும்"

( அல்லது )

- பேராசிரியர் ரெட்டின் அவர்களின் கூற்றுபடி, " மேலாண்மையின் நிலைப்பாடுகளுக்கு ஏற்ற தரநிலைகளை நிறுவுதல் மற்றும் அளவிடக்கூடிய காலக்கோடு இலக்குகள் கொண்ட கால



இடைவெளியை செங்குத்தாகவும் கிடைமட்டமாகவும் , எதிர்கால திட்டமிடலுடன் இணைத்துக் கொள்ளும் கால இடைவெளியை குறிக்கிறது"

**22. நிதிச்சந்தை - சிறு குறிப்பு வரைக.**

- எந்த ஒரு சந்தையில் நிதி கோரல்கள், சொத்துகள் மற்றும் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகள் வியாபாரம் செய்யப்படுகின்றதோ அதுவே 'நிதிச் சந்தை' எனப்படுகிறது.
- நிதி அளிப்பவர்களிடம் உள்ள உபரி நிதியை, நிதிதேவை உள்ளவரின் நிதிப் பற்றாக்குறையை நோக்கி, கடன் நிதியை எடுத்து செல்வது நிதிச் சந்தை எனவும் கூறலாம்.

**23. செபியின் இரண்டு நோக்கங்களை எழுதுக.**

1) பங்குச் சந்தைகளை ஒழுங்குபடுத்துவது
2) முதலீட்டாளர்களின் நலன்களைப் பாதுகாப்பது
3) உள்வழி வியாபாரத்தை சரி பார்க்க பல நடவடிக்கைகள் எடுப்பது
4) இடைநிலையர்களின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவது மற்றும் கண்காணிப்பது

**24. அக வள ஆட்சேர்ப்பின் ஏதேனும் இரண்டு நன்மைகள் கூறுக.**

1) ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை, பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு, எளிமையான வழியில் இடமாற்றம் செய்யலாம்.
2) பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று, பணி புரிய வாய்ப்பு அளிக்கலாம்.

**25. பொருட்கள் சந்தை என்றால் என்ன?**

- உற்பத்தி பொருட்கள் அல்லது நுகர்வு பொருட்கள் போன்றவை வாங்குதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் சந்தை, பொருட்கள் சந்தையாகும்.

**26. "வாங்குவோர் ஜாக்கிரதை" எனறால் என்ன?**

- பொருளை வாங்குபவர் அப்பொருளை வாங்கும் முன், அதனை முழுமையாக குறைகள் ஏதேனும் இருக்கிறதா என பரிசோதித்து வாங்க வேண்டும்.
- ஏனெனில், பொருளை வாங்கிய நுகர்வோருக்கு அதனை திருப்பித்தர உரிமையில்லை. மேலும், விற்றவரும் பொறுப்பாக மாட்டார் என்பதை குறிப்பதே,
- "வாங்குவோர் ஜாக்கிரதை அல்லது விழித்திரு" எனும் கோட்பாடு ஆகும்.

**27. உட்புறச் சூழல் என்றால் என்ன?**

- உட்புறச் சூழல் என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும்.
- இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும்.
- எடுத்துக்காட்டு : கொள்கைகள் மற்றும் திட்டங்கள், நிறுவன கட்டமைப்பு, ஊழியர்கள், நிதி மற்றும் வளங்கள்

**28. நம்புறுதி என்றால் என்ன?**

- ஒப்பந்தத்தில் ஒரு பொருளுக்குத் துணையாக உள்ள கூற்று, நம்புறுதிகளாகும்.

**29. தொழில் முனைவோரின் மேலாண்மை பணிகளை பட்டியலிடுக.**

1) திட்டம் தீட்டல் 2) அமைப்பு பணி 3) கட்டளை இடல் 4) கட்டுபாடு காத்தல்

5) ஒருங்கிணைப்பு

**30. தீர்மானம் என்றால் என்ன?**

- இயக்குநரவையால் எடுக்கப்பட்ட ஒரு முடிவை, நடைமுறைப்படுத்த, சட்டப்படி குறைந்தளவு எண்ணிக்கைக் கொண்ட பங்குகளின் கூட்டத்தில், ஓட்டு பதிவு நடத்தியோ அல்லது வேறு முறையின் மூலமாக பங்குநர்களால் அளிக்கப்படும் ஒப்புதலை தீர்மானம் என்கிறோம்.

## பகுதி - III

**31. மேலாண்மை மற்றும் நிர்வாகம் வேறுபடுத்துக.**

| வ. எண் | அடிப்படை | மேலாண்மை | நிர்வாகம் |
|---|---|---|---|
| 1 | பொருள் | மற்றவர்களின் முயற்சி மற்றும் ஒத்துழைப்புடன் நோக்கங்களை எய்தும் ஒரு கலை மேலாண்மை ஆகும் | நிறுவனத்தை நிர்வாகிப்பதற்கான செயல்முறையே நிர்வாகம் ஆகும் |
| 2 | அதிகாரம் | மத்திய மற்றும் கீழ்மட்ட அளவில் | உயர்மட்ட அளவில் |
| 3 | பங்கு | நிறைவேற்றம் | முடிவெடுத்தல் |
| 4 | முக்கிய நபர் | மேலாளர் | நிர்வாகி |
| 5 | பணி | நிர்வாகம் மற்றும் ஆளுமை | சட்டம் மற்றும் தீர்மானித்தல் |

**32. மூலதனச் சந்தையின் வகைகளை விளக்குக.**

- மூலதனச்சந்தை , முதல் நிலைசசந்தை மற்றும் இரண்டாம் நிலைச் சந்தை என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

1) <u>முதல்நிலைச் சந்தை</u>

- முதல்நிலைச் சந்தை என்பது, புதிய வெளியீடுகளுக்கான ஒரு சந்தை ஆகும்.
- இது புதிய வெளியீடுகள் சந்தை எனவும் அழைக்கப்படுகிறது.
- ஒரு முதல் நிலைச் சந்தையில், ஒரு நிறுமம் பின்வரும் மூன்று வழிகளில் மூலதனத்தை திரட்டி கொள்ளலாம். அவைகள்:

a) <u>பொது வெளியீடு</u>

- புதிய நிறுமத்தால், பொதுமக்களுக்கு பத்திரங்கள் விற்பனை செய்வதன் மூலம் மூலதனம் திரட்டப்படுவது, பொது வெளியீடு ஆகும்.

b) <u>உரிமை வெளியீடு</u>

- ஏற்கனவே இயங்கி கொண்டிருக்கும் நிறுமம், கூடுதல் முதலை திரட்ட விரும்பும் போது முன்னுரிமை அடிப்படையில் தனது பங்குதாரர்களுக்கு முதலில் பங்குகளை முன்மொழிகிறது. இதுவே உரிமைவெளியீடு எனப்படும்.



c) <u>தனியார் வெளியீட்டு முறை</u>

- ஒரு சிறு குழு முதலீட்டாளர்களுக்கு, பத்திரங்களை தனிப்பட்ட முறையில் விற்பனை செய்யும் முறை தனியார் வெளியீட்டு முறை எனப்படும்.

2) <u>இரண்டாம் நிலை சந்தை</u>

- ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்களுக்கான சந்தை, இரண்டாம் நிலைச்சந்தை என வரையறுக்கப்படுகிறது.
- ஏற்கனவே முதல் நிலைச்சந்தையில் வெளியீடு செய்யப்பட்ட பத்திரங்கள், இங்கு வணிகம் செய்யப்படுகின்றன.

**33. காளை மற்றும் கரடி - விளக்குக.**

<u>காளை</u>

- பத்திரங்கள் எதிர்காலத்தில் விலையேற்றம் பெறும் என்று எதிர்பார்க்கின்ற ஊகவணிகர்.
- இவர் தெஜிவாலா என்றழைக்கப்படுகிறார்.
- இவர் எல்லாம் நன்மைக்காகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்.

<u>கரடி</u>

- எதிர்காலத்தில் பத்திரங்களின் விலைகள் வீழ்ச்சி அடையும் என்று எண்ணுகின்ற ஊகவணிகர்.
- இவர் மண்டிவாலா என்றழைக்கப்படும் ஊகவணிகர்
- இவர் எதிலும் பின்னோக்கிய மனப்பாங்கு கொண்டவர்.

**34. மனித வள மேலாண்மையின் பணிகளை பட்டியலிடுக.**

அ) <u>மேலாண்மைப்பணிகள்</u> :

- திட்டமிடுதல், அமைத்தல், இயக்குவித்தல், கட்டுப்படுத்துதல்.

ஆ) <u>இயக்கப்பணிகள்:</u>

- திரட்டுதல், அபிவிருத்தி, இழப்பீடு, தக்கவைத்தல், ஒருங்கிணைத்தல், நிர்வகிப்பு.

**35. சந்தையிடுகை கலவை என்பது பற்றி நீவிர் அறிவது யாது? ஏதேனும் இரண்டு கூறுகளை விளக்கவும்.**

- சந்தையிடுகை கலவை மூலம் நிறுவனம் தனது நுகர்வோர்களை குறிவைத்து அதன் மூலம் லாபம் ஈட்டுவதே ஆகும்.
- இத்தகைய சந்தையிடுகையின் செயல்பாடுகள் நான்கு வகை கலவை பொருட்களை கொண்டுள்ளது.
- அதாவது பொருட்கலவை, விலைக் கலவை, இடக்கலவை, மற்றும் மேம்பாட்டு கலவை போன்றவையாகும்.

<u>கூறுகள்</u>

1) <u>பொருள்</u>

- பொருள், சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
- பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது என்று கூறுகின்ற அளவிற்கு பொருள் முக்கிய இடம் பெறுகிறது.

2) <u>விலை</u>

- பிலிப்கோட்லர் அவர்களின் கருத்துப்படி, " விலை என்பது பண்டங்கள் மற்றும் பணியின் மாற்று மதிப்பாக பெறப்படும் ஒன்றாகும்" அல்லது நுகர்வோர்கள் நலன் கருதி பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ளதக்க ஒன்றுதான் விலை என்கிறார்".

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

3) **இடம்**

- ஒரு பொருள் என்னதான் தரம் வாய்ந்தவையாகவும், விலையில் சாதகத் தன்மை மற்றும் சிறந்த மேம்பாட்டு நடவடிக்கைகள் இருந்த போதிலும், உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை, பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லையெனில், அனைத்தும் பயன் அற்றதாகும்.
- எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம், ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.

4) **விற்பனை மேம்பாடு / விளம்பரம்**

- சந்தையில் ஒரு பொருள் என்னதான் தரமுடையதாக இருந்தாலும், மேலும் விலையில் சாதகநிலை இருந்தாலும், நுகர்வோர் மத்தியில் பொருளின் சிறப்பு இயல்புகள் மற்றும் பயன்பாடு குறித்து தெரியப்படுத்தாத நிலையில், அப்பொருள் நிர்ணயித்த வெற்றியை ஒரு போதும் அடைய இயலாது.
- எனவே மேம்பாட்டு நடவடிக்கைகள், மிகவும் அவசியமான ஒன்றாகும்.
- மேம்பாட்டு நடவடிக்கையில், விளம்பரம் அதிகபங்கு வகிக்கிறது.

---

### 36. மாநில நுக்கர்வோர் குறைதீர் ஆணையத்தின் அதிகார எல்லை யாது?

**அதிகார எல்லை**

- ₹. 20 லட்சத்திற்கு மிகையாக, ஆனால் ₹. 1 கோடிக்குள்ளாக விற்கப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை தொடர்பாக எழும் குறை மனுக்களை, விசாரிக்கும் அதிகாரம் மாநில ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
- மாநில மன்றத்தின் தீர்ப்புகளுக்கு எதிராக, மேல்முறையீடு செய்யப்பட்ட மனுக்களை விசாரித்து, தீர்ப்பு வழங்கும் அதிகாரம், மாநில ஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

---

### 37. வியாபாரத்தின் மூன்று சுற்றுச் சூழல் காரணிகளை விளக்கு.

1) **உட்புறச் சூழல்**

- உட்புறச் சூழல் என்பது, நிறுவனத்தின் உட்புறத்தோடு தொடர்புடைய காரணிகளாகும்.
- எனவே,இவற்றைக் கட்டுப்படுத்துதல், மாற்றி அமைத்தல் போன்றவற்றை நிறுவனங்கள் எளிதில் மேற்கொள்ள முடியும்.

2) **நுண்ணிய சூழல்**

- வியாபாரத்தின் செயல் திறனை உடனடியாக பாதிக்கும், சுற்று சூழலாக இருக்கும் காரணிகளை இது குறிக்கிறது.

3) **பரந்த சூழல்**

- வணிகத்தின் வெற்றி, பரந்த சூழலுக்கு பொருந்தக் கூடிய தன்மையை சார்ந்து இருக்கிறது.
- ஏனென்றால், இவை கட்டுப்படுத்த முடியாத காரணிகள் ஆகும்.

---

### 38. எப்போது விலைபெறா வணிகர் வாங்குநரின் மீது தனிப்பட்ட முறையில் வழக்கு தொடுக்கலாம்?

1) விற்கப்பட்ட சரக்கின் உரிமை வாங்குனர்க்கு மாற்றித் தந்த பிறகும், வாங்குனர் பொருளுக்கான விலையைத் தரத் தவறும்போது, விற்பவர் அதற்கான விலையைப் பெற வழக்கு தொடுக்கலாம்.

2) வாங்குனர் சரக்கைத் தவறுதலாக ஏற்க மறுத்தால் அதற்கான நட்ட ஈடு கேட்டு வழக்கு தொடரலாம்.



3) சரக்கை ஒப்படைக்கும் நாளுக்கு முன்பாக, வாங்குனர் ஒப்பந்தத்தை மறுத்துரைக்கும் போது, விற்பவர் ஒப்படைவு நாள் வரை காத்திராமல், உடன் நட்ட ஈடு கேட்டு வழக்குத் தொடுக்கலாம் அல்லது ஒப்படைப்பு நாள் வரை காத்திருந்த பின்வழக்கு போடலாம்.

4) விற்பனை விலையை தராதபோது அதற்கான வட்டி கேட்கும் உரிமையை, விற்பனையாளர் விற்பனை ஒப்பந்தத்தில் தெளிவாகக் குறிப்பிட்டு இருந்தால், விலை செலுத்த வேண்டிய நாளிலிருந்து வட்டியையும் சேர்த்து வசூலிக்க முடியும்.

---

### 39. வேளாண் தொழில் முனைவோரைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

- வேளாண் தொழில் முனைவோர் வேளாண் பொருட்களை விளைவித்து சந்தையிடும் தொழிலை முனைகின்றனர்.
- இவர்கள் பல்வேறு இயற்கை சார்ந்த உள்ளீட்டு பொருட்களான உரம், விதை, தண்ணீர், பூச்சிக்கொல்லி மருந்துகள், உழைப்பு போன்ற இடு பொருட்களை கொண்டு உணவு பொருட்களை உற்பத்தி செய்கின்றனர்.
- அவ்வாறு உற்பத்தி செய்த தானியங்களை நேரடியாகவோ அல்லது கூட்டுறவு அமைப்புகள் மூலமாகவோ சந்தை இடுகின்றனர்.
- இது மட்டுமன்றி வேளாண் சார்ந்த தொழில்களான மாட்டுப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, மீன் பண்ணை, கோழி வளர்ப்பு, முயல் வளர்ப்பு, தேன் எடுத்தல், பூ வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், நன்நீர் இறால் பண்ணை, வேளாண் கருவிகள் உற்பத்தி செய்தல் போன்ற செயல்களிலும் வேளாண் தொழில் முனைவோர்கள் ஈடுபடுகின்றனர்.

---

### 40. இயக்குநர் ஒருவர் தகவலறிக்கையில் தவறான தகவல்களை அளிப்பது எத்தகைய பொறுப்பாகும். அதற்கான தண்டனைகள் யாவை?

1) குற்றவியல் சார்ந்த பொறுப்பாகும்.

2) **தண்டனைகள்** :

- அபராதம் மற்றும் சிறைதண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

---

## பகுதி - IV

### 41. அ) மேலாண்மயின் முக்கிய பணிகளை கூறி விளக்குக

1) **திட்டமிடுதல்**

- திட்டமிடுதல் என்பது, மேலாண்மையின் செயல்பாடுகளில் முதன்மையானது ஆகும்.
- திட்டமிடுதல் இல்லாமல் எந்த ஒரு காரியமும் செய்யமுடியாது.
- திட்டமிடுதல் என்பது, வருங்கால தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஒரு ஆக்கபூர்வமான மதிப்பீடு ஆகும்.

2) **ஒழுங்கமைத்தல்**

- ஒரு அமைப்பின் உறுப்பினர்களுக்கு இடையில் இணக்கமான உறவை ஏற்படுத்துவதும்,
- ஒரு வலைப்பின்னல் போன்ற அமைப்பை அவர்களது உறவுகளுக்கு இடையில் உருவாக்கும் செயல் முறையே ஒழுங்கமைத்தல்ஆகும்.

3) **பணிக்கமர்த்துதல்**

- பொருத்தமான நபர்களை, பொருத்தமான வேலைக்கு அமர்த்தும் செயலைக் குறிப்பதாகும்.

4) **இயக்குவித்தல்**

- தற்போதைய இலக்குகளை சாதிக்கும் பொருட்டு தொடர்ச்சியான அடிப்படையில் செயலூக்கமளித்தல், முன்னணியிலிருத்தல், வழிகாட்டுதல், மற்றும் கீழ்நிலைப் பணியாளர்களுடன் தொடர்பு படுத்துதல் போன்றன இயக்குதலைக் குறிக்கிறது.

5) **கட்டுபாடுகாத்தல்**

- குறைந்த செயல்திறன் உடையவர்களை அடையாளம் காண்பதற்கும், குறைதீர் பயிற்சிகளை அவர்களுக்கு வழங்குவதற்கும் கட்டுப்பாட்டு செயல்பாடு உதவுகிறது.

6) **ஒருங்கிணைத்தல்**

- அனைத்து தனிநபர்களுடைய செயல்களின் ஒருங்கிணைத்தல்.
- ஒவ்வொரு நிர்வாக செயல்பாடுககளையும் ஒருங்கிணைத்தல்.

7) **செயலூக்கமளித்தல்**

- ஒரு பணியை விரைவாக செய்து முடிப்பதையும், பணியாளர்களின் பணியின் மீதான விருப்பத்தை வளர்ப்பதையும் செயலூக்கமளித்தல் என்ற சொல் உள்ளடக்கியுள்ளது.

( அல்லது )

**41 ஆ) முதல் நிலைச்சந்தை மற்றும் இரண்டாம் நிலைச்சந்தைக்கும் இடையேயான வேறுபாடுகளை விளக்குக.**

| வ.எண் | அடிப்படை | முதல் நிலைச்சந்தை | இரண்டாம் நிலைச்சந்தை |
|---|---|---|---|
| 1 | பொருள் | இது, புதிய பங்குகளுக்கான சந்தை | இது, ஏற்கனவே வெளியீடு செய்யப்பட்ட பங்குகளுக்கான சந்தை |
| 2 | கொள்முதலின் வகைகள் | நேரடி | மறைமுகம் |
| 3 | பத்திர விற்பனை | ஒரே ஒரு முறை நடைபெறும் | பலமுறை நடைபெறும் |
| 4 | வாங்குதல் மற்றும் விற்பனை | நிறுமங்கள் மற்றும் முதலீட்டாளர்களிடையே | முதலீட்டாளர்களுக்கு இடையே |
| 5 | பங்குகளை விற்பதன் மீதான ஆதாயம் பெறும் நபர் | நிறுமம் | முதலீட்டாளர்கள் |
| 6 | இடைநிலையர் | ஒப்புறுதியாளர்கள் | தரகர்கள் |
| 7 | விலை | நிலையான விலை | தேவை மற்றும் அளிப்பை பொறுத்து மாறும் |
| 8 | அமைப்பு வேறுபாடு | குறிப்பிட்ட புவியியல் வேறுபாடு இல்லை | இதற்கு புற அமைப்பு உள்ளது |



**42. அ) பங்கு மாற்றகங்களின் சிறப்பியல்புகளை விவரி.**

1) **பத்திரங்களுக்கான சந்தை**

- இது பெருநிறுவனங்கள், அரசு மற்றும் அரசுக்கு இணையான நிறுவனங்கள் ஆகியவற்றின் பத்திரங்கள் வாங்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

2) **மறுவிற்பனை பத்திரங்களுக்கான சந்தை**

- நிறுவனங்களால் ஏற்கனவே வெளியிடப்பட்ட பங்குகள், கடனீட்டு பத்திரங்கள் மற்றும் பத்திரங்கள் விற்பனையில் இது ஈடுபடுகிறது.
- எனவே, இது இரண்டாம் நிலைசந்தை என்று அழைக்கப்படுகிறது.

3) **பத்திர வர்த்தகத்தை ஒழுங்குபடுத்துதல்**

- பங்கு மாற்றகம் அதன் சொந்தகணக்கில் எந்தப் பத்திரங்களையும் வாங்குவதோ விற்பதோ இல்லை.
- பத்திர வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் பங்கு மாற்றக உறுப்பினர்கள் மற்றும் தரகர்கள் ஆகியோர் பத்திரங்களை வர்த்தகம் செய்வதற்கு தேவையான உள் கட்டமைப்பு மற்றும் வசதிகளை அது வழங்குகிறது.
- சுதந்திரமான மற்றும் வெளிப்படையான வர்த்தகத்தை உறுதி செய்வதற்காக, வர்த்தக நடவடிக்கைகளை பங்கு மாற்றகம் ஒழுங்குபடுத்துகிறது.

4) **பட்டியலிடப்பட்ட பத்திரங்களில் மட்டும் வணிக நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதியளித்தல்**

- உண்மையில் பங்கு மாற்றகம் அலுவல் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் பத்திரங்களை மட்டுமே வாங்கி விற்க அனுமதிக்கிறது.
- பங்கு பரிவர்த்தனைகளின் பட்டியலில் காணப்படாத பத்திரங்கள், பட்டியலிடப்படாத பத்திரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- அத்தகைய பட்டியலிடப்படாத பத்திரங்கள், பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யமுடியாது.

5) **உறுப்பினர்களால் மட்டும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

- பங்கு மாற்றகத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து வகை பத்திர நடவடிக்கைகளும் அதன் அங்கீகரிக்கப்பட்ட தரகர்கள் மற்றும் உறுப்பினர்கள் மூலமாக மட்டுமே செயல்படுத்தப்படுகின்றன.
- பங்குச் சந்தையில் வெளிநபர்கள் அல்லது நேரடி முதலீட்டாளர்கள் பங்கு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதியில்லை.

6) **தனிநபர்களின் அமைப்பு**

- இது, தனி நபர்களின் அல்லது குழுக்களின் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அமைப்பாக இருக்கலாம்.

7) **மத்திய அரசின் அங்கீகாரம்**

- இது, ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட சந்தையாகும்.
- அரசின் அங்கீகாரம் இதற்கு தேவைப்படுகிறது.

8) **விதிகளின்படி செயல்படுதல்**

- பங்குச் சந்தையில் பங்குகளை வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல் ஆகியவை பங்கு மாற்றகம் மற்றும் SEBI வழிகாட்டுதலின் படி அவை கொண்டுள்ள விதிகள் மற்றும் ஒழுங்கு முறைகளால் நிர்வகிக்கப்படுகின்றன.

9) **குறிப்பிட்ட இடம்**

- அங்கீகரிக்கப்பட்ட தரகர்கள், பங்குச் சந்தைக்கு தினசரி வருகை தந்து, ஒன்றுகூடி வணிக நடவடிக்கைகள் ஈடுபடும் ஒரு குறிப்பிட்ட சந்தை பகுதிதான், பங்கு மாற்றகங்கள் எனப்படுகிறது.
- இது வர்த்தக வட்டம் என்றும் அழைக்கப்படுகிறது.

10) <u>நிதி அளவீடுகள்</u>

- பங்குச் சந்தைகள் நிதி அளவீடுகளாகவும் மற்றும் இந்திய தேசிய பொருளாதாரத்தின் அடையாளமாகவும் இருக்கிறது.

( அல்லது )

1. 42 ஆ. ஆட்சேர்ப்பின் அகவளங்கள் ஏதேனும் ஐந்தினை விவரி.

1) <u>இடமாற்றம்</u> :

- ஒரு துறையில் இருக்கும் உபரி பணியாளர்களை, பற்றாக்குறை உள்ள மற்ற துறைகளுக்கு பணி மாற்றம் செய்வதன் மூலம், காலிபணியிடங்களுக்கு தேவையான பணியாளர்களை எளிமையான வழியில் நிரப்பலாம்.

2) <u>மேம்படுத்துதல்</u>:

- பணியாளர்கள் கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைநோக்கி செல்ல, செயல்திறன் மதிப்பீட்டு முறை உதவுகிறது.

3) <u>பதவி உயர்வு</u>:

- பணிமூப்பு மற்றும் தகுதியின் அடிப்படையில், பணியாளர்கள் நிறுவன அமைப்பின் படிநிலையில் உள்ள கீழ்மட்ட நிலையிலிருந்து, மேல்மட்ட நிலைக்கு சென்று, பணி புரிய வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

4) <u>பதவி இறக்கம்</u>:

- பணியில் தொடர்ந்து குறைவான செயல் திறனை வெளிப்படுத்தும் பணியாளர், செயல் திறனின் முக்கியத்துவத்தை உணரும் வகையில், அவரை மேல்நிலை பணியிலிருந்து, கீழ்நிலை பணிக்கு மாற்றிவிடுவது பதவி இறக்கம் எனப்படுகிறது.

5) <u>தக்கவைத்தல்</u>:

- மேலாண்மை விருப்பப்படி, வயது முதிர்வு, ஓய்வுக்குப் பிறகு ஓய்வூதியம் பெறும் பணியாளர்களை நிறுவன தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

6) <u>ஓய்வு பெற்ற ஊழியர்கள்</u>:

- போதிய தகுதி மற்றும் அனுபவம் கொண்ட ஓய்வு பெற்ற பணியாளர்களை கொண்டு நிறுவனத்தில் உள்ள காலியிடங்களை நிரப்பிக் கொள்ளலாம்.

7) <u>சார்ந்தவர்கள்</u>:

- இறந்த பணியாளருக்கு பதிலாக, அவருடைய சட்ட வாரிசு அல்லது அவரை சார்ந்த ஒருவருக்கு வேலையில் வாய்ப்பு வழங்கப்படலாம்.

43. அ) சந்தையிடுகை கலவையின் கூறுகளை சுருக்கமாக எழுதுக.

1) <u>பொருள்</u>

- பொருள், சந்தையில் ஒரு முக்கிய கூறு ஆகும்.
- பொருள் இல்லையெனில் எந்த ஒரு சந்தையும் இயங்க இயலாது.

2) <u>விலை</u>

- பண்டங்கள் மற்றும் பணிகளுக்கு இணையான மதிப்பை மாற்றிக் கொள்ளதக்க ஒன்றுதான் விலை .

3) <u>இடம்</u>

- உற்பத்தி இடத்திலிருந்து நுகர்வு இடம் வரை, பொருட்களை சரியான முறையில் மற்றும் சரியான நேரத்தில் கொண்டு செல்லவில்லையெனில், அனைத்தும் பயன் அற்றதாகும்.
- எனவே சரியான நேரத்தில் சரியான இடத்திற்கு கொண்டு செல்வதற்கு இடம், ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது.



4) <u>விற்பனை மேம்பாடு / விளம்பரம்</u>

- சந்தையில் ஒரு பொருள் என்னதான் தரமுடையதாக இருந்தாலும், மேலும் விலையில் சாதகநிலை இருந்தாலும், நுகர்வோர் மத்தியில் பொருள் சென்றடைய விளம்பரம் அதிகபங்கு வகிக்கிறது.

( அல்லது )

43 ஆ) தாராளமயமாக்கலின் நன்மைகளை விளக்குக.

1) வணிகத்தை தாராளமயமாக்குதலின் மூலமாக, அதிக அளவில் வெளிநாட்டு முதலீடுகளை பெற முடிகின்றது,
2) வெளி நாட்டு முதலீட்டிற்கு, அந்நிய செலவாணிக்குமான கட்டுப்பாடுகளை தளர்த்தி, மூலதனத்தை எளிதில் பெறுவதற்கு வழி வகை செய்கிறது.
3) ஒரு நாட்டில் பயன்பாட்டிற்கு அதிக அளவிலான பொருட்களை கிடைக்கவும் அதிக உற்பத்திக்கும் வழிவகை செய்கிறது.
4) ஏற்றுமதி இறக்குமதி தீர்வைகளை நீக்குவதால், நுகர்வோருக்கு குறைந்த விலைக்கு பொருட்கள் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.
5) தாராளமயமாக்கலினால், இறக்குமதி நாடுகளுக்கு நன்மை விளைவிக்கிறது.
6) வெளி நாட்டுக் கடன்களை ஈர்ப்பதன் மூலம், வெளிநாட்டு வர்த்தகக் கடன்களை வாங்கும் வாய்ப்பு குறைக்கிறது.

44. அ) காசோலையின் இயல்புகளை விளக்குக.

1) <u>காசோலை எழுத்து வடிவில் இருக்க வேண்டும்</u>

- காசோலை எழுத்து வடிவில் வரையப்பட்டு இருக்கவேண்டும்.
- ஆனால் சட்டமோ அது பென்சிலால் கூட எழுத தடைவிதிக்கவில்லை.
- என்றாலும், மோசடி செய்யும் வாய்ப்பைக் கருதி, வங்கியாளர்கள் தாங்களே காசோலையை அச்சிட்டு தருகிறார்கள்.

2) <u>நிபந்தனையற்ற ஆணை</u>

- காசோலையில் வாடிக்கையாளர் பணம் "கொடுக்க" என கட்டளை பிறப்பிக்க வேண்டும். தயவு செய்து என்ற வார்த்தை இருந்தாலும் காசோலை செல்லும்.
- ஆனால் கட்டளை, நிபந்தனைகள் அற்றதாக இருக்கவேண்டும்.

3) <u>குறிப்பிட்ட வங்கியர் மீது வரையப்படுதல்</u>

- காசோலையை ஒரு குறிப்பிட்ட வங்கியர் மீது மட்டுமே எழுத முடியும். அதுவும் ஒரு வங்கியின் எந்தக் கிளையில் வாடிக்கையர் பணம் வைத்துள்ளாரோ சம்மந்தப்பட்ட கிளையில் பணம் கொடுக்குமாறு எழுதவேண்டும்.

4) <u>நிச்சயமான ஒரு தொகை</u>

- வங்கியரை ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்கும் படி ஆணை இட வேண்டும்.
- குறிப்பிட்ட அளவு பிணையம் வெளியிட ஆணை பிறப்பிக்க முடியாது.

5) **<u>பணம் பெறுபவரைத் திட்ட வட்டமாக குறிப்பிட வேண்டும்</u>**

- காசோலையை ஒரு குறிப்பிட்ட நபருக்கு அல்லது அவரது ஆணை பெற்றவருக்கு தரும்படி எழுத வேண்டும் அல்லது கொணர்பவர் காசோலை எனில், கொணர்பவருக்கு பணம் தருமாறு ஆணையிடலாம்.

6) **<u>கேட்டவுடன் தருமாறு எழுதப்படுவது</u>**

- காசோலையை கேட்டவுடன் தருமாறு எழுதப்பட வேண்டும்.
- எப்போது தர வேண்டும் என்ற நாள் குறிப்பிடப்பட்டிருப்பின், கேட்டவுடன் கொடுக்க என்ற கட்டளை தேவையற்றது.

7) **<u>எழுதுபவர் கையொப்பம்</u>**

- எழுதுபவர் கையொப்பம் இடவேண்டும்.
- வங்கியருக்கு ஐயம் ஏற்படின், அவர் கணக்கு ஆரம்பித்த பொழுது கொடுத்திருக்கும் மாதிரி கையொப்பத்துடன் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

**( அல்லது )**

**44 ஆ) வியாபாரத்தின் நுண்ணிய சூழல் காரணிகளை விளக்கு.**

**<u>நுண்ணிய சூழல்காரணிகள்</u>**

- வியாபாரத்தின் செயல் திறனை உடனடியாக பாதிக்கும் சுற்று சூழலாக இருக்கும் காரணிகளை இது குறிக்கிறது. இதில் பின்வருவன அடங்கும்.

1) **<u>நிதி அளிப்பவர்கள்</u>**

- கடனீட்டுப் பத்திரதாரர்கள் மற்றும் நிதி நிறுவனங்கள் வணிகம் சிறந்த முறையில் இயங்க, முக்கிய பங்கினை வகிக்கிறார்கள்.
- அவர்களின் நிதி திறன், கொள்கை உத்திகள், இடர் பற்றிய அணுகுமுறை மற்றும் நிதி சாரா அமைப்புகளின் பங்கு முக்கியமாக உள்ளது.

2) **<u>சரக்கு விற்பனையாளர்கள்</u>**

- எந்தவொரு அமைப்பிலும், மூலப்பொருட்கள் மற்றும் இதர உள்ளீடுகளின் வழங்குநர்கள், மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.
- விநியோகிப்பாளரிடமிருந்து பெறப்படும் பொருட்கள், உற்பத்திகளில் தொடர்ச்சியான செயல்பாட்டை செயல்படுத்துகிறது.
- அது சரக்கிருப்பு / கையிருப்பு, சரக்கை பராமரிப்பதற்கான செலவை குறைக்கிறது.
- நிறுவனங்கள் தங்கள் உற்பத்திக்கு தேவையான பொருட்களை பெறுவதற்கான ஒரே மூலமாக பெறாமல், ஒரு குழுவிடமிருந்து பெறுவதே சாலச் சிறந்தது.

3) **<u>சந்தையிடுகை இடைநிலையர்கள்</u>**

- உற்பத்தி பொருளை விற்பனை செய்யவும், நுகர்வோரிடம் கொண்டு சேர்ப்பதற்கும், விநியோகிப்பாளர்களின் உதவி தேவைப்படுகிறது.
- இவர்கள் நிறுவனத்தையும், நுகர்வோரையும் இணைக்கும் பாலமாக திகழ்கின்றனர்.
- மொத்த விற்பனையாளர்கள், சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் முகவர்கள் பொருள்களை, நுகர்வோரிடம் சேர்ப்பதை உறுதி செய்கின்றனர்.

4) **<u>பொதுமக்கள்</u>**

- இது ஊடகக்குழு, குடிமக்கள் குழு மற்றும் உள்ளூர் பொது மக்கள் குழு போன்ற குழுக்கள் வியாபாரத்தில், தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- பொதுமக்களிடம், ஒரு வியாபாரத்தை உருவாக்குவதற்கும் அல்லது அழிப்பதற்குமான திறமை உள்ளது.



<u>எடுத்துகாட்டு:</u> 2018 ஆம் ஆண்டு தூத்துக்குடியில் உள்ள ஸ்டெர்லைட் காப்பர் தொழிற்சாலை சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவினால் ஆர்பாட்டங்கள் நடத்தி மூடப்பட்டுள்ளது.

5) **<u>வாடிக்கையாளர்கள்</u>**

- ஒவ்வொரு வியாபாரத்தின் நோக்கமும், அதன் வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகும்.
- வாடிக்கையாளரே வணிகத்தின் மன்னராக கருதப்படுகிறார் மற்றும் அவர்களை சுற்றியே வணிகம் உள்ளது.
- பல்வேறுபட்ட நுகர்வோரின் தேவையை புரிந்து கொள்வது, வணிகத்திற்கு மிகவும் அவசியமாகிறது.

6) **<u>போட்டியாளர்கள்</u>**

- அனைத்து நிறுவனங்களும் எல்லா நிலைகளிலும் போட்டியை, எதிர் கொள்ள வேண்டியுள்ளது.
- உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய அளவில், ஒரே மாதிரியான பொருள் உற்பத்தி அல்லது தயாரிப்புகள் இருப்பதால் நிறுவனங்கள், பல்வேறு நிலைகளில் போட்டியிடக் கூடிய நிலை ஏற்படுகிறது.
- எனவே, வணிக நிறுவனங்கள், போட்டியாளரைப் புரிந்து கொண்டு, போட்டியிடும் போக்கில் அவர்களின் தொழில் யுக்திகளை மாற்ற வேண்டியது அவசியமாகிறது.

**45. அ) விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக.**

1) **<u>இருதரப்பினர்</u>**

- சரக்கு விற்பனைச் சட்டத்தில் இருதரப்பினர்கள் ஈடுபட்டுள்ளனர்.
- அவர்களில் ஒருவர் வாங்குனர், இன்னொருவர் விற்பனையாளர்.

2) **<u>பொருளின் மீதான உரிமை மாற்றம்</u>**

- விற்பனை என்று அழைக்க, விற்பவர் பொருளின் மீதான உரிமையை வாங்குபவருக்கு மறுபயன் பெற்றுக் கொண்டு மாற்றித் தரவேண்டும்.
- பொருளின் உடைமையை மாற்றுவது என்ற செயல் விற்பனை ஆகாது.

3) **<u>சரக்கு / பொருள்</u>**

- சரக்கில் அனைத்து அசையும் சொத்துகளான பங்குகள், பயிர்கள் மற்றும் கண்ணுக்குப் புலனாகாத இனங்களான நற்பெயர், காப்புரிமை, பதிப்புரிமை, வணிகக்குறிகள், வியாபார சூத்திரம் போன்றவைகளும் உள் அடங்கும்.

4) **<u>விலை</u>**

- பொருளின் விற்பனைக்கு மறுபயனே விலை ஆகும்.
- பொருளைப் பொருளுக்கு மாற்றாக பரிமாற்றம் செய்துக் கொள்வது விலையாகாது.
- பொருளைப் பகுதியாக பொருளுக்கும், மீதப் பகுதியாக விலைக்குமே மாற்றிக் கொள்ளும்போது, விலைக்கு மாற்றிய பகுதி மட்டும் விற்பனை நடவடிக்கை ஆகும்.

5) **<u>விற்பனை மற்றும் விற்பனை உடன்பாடு</u>**

- விற்பனை ஒப்பந்தம் என்ற சொல்லில் விற்பனையும் மற்றும் விற்பனை உடன்பாடும் உள்ளடங்கியது.
- பொருளின் உரிமையை, உடனே மாற்றிவிடக் கூடிய நடவடிக்கைகள் விற்பனை ஆகும்.
- பொருளின் உரிமையை, எதிர்காலத்தில் மாற்றும் நடவடிக்கைகளுக்கு விற்பனை உடன்பாட்டு நடவடிக்கைகள் ஆகும்.

45 ஆ) **பணிசார் அடிப்படையிலான தொழில் முனைவு வகைப்பாட்டினை விவரித்து எழுதுக.**

1) <u>புதுமை படைக்கும் தொழில் முனைவோர்</u>
- ஒரு புதுமை புகுத்திக் கொண்டே இருப்பவர்.
- இவர்கள் எப்போதும் வியாபாரச் சூழல்களை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டே இருப்பவர்கள்.
- அதன் அடிப்படையில், நுகர்வோருக்கு எந்தெந்த தேவை நிறைவேறாமல் இருக்கிறது என்பதைப் பகுத்து ஆய்ந்து, அதனை தங்களுடைய பொருட்களின் மூலம் நிறைவேற்றுவார்கள்.
- இவர்களை புதுமைப் பித்தர்கள் எனலாம்.

2) <u>மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்</u>
- மாதிரியை பின்பற்றும் தொழில் முனைவோர்கள், தற்போது சந்தையில் கிடைக்கும் பொருள்களை, தங்களின் அறிவு, ஆற்றல், வல்லமையை வைத்துக்கொண்டு வேறுமுறையில் வடிவமைப்பவர்கள்.
- இவர்கள் மேலைநாடுகளில் வடிவமைக்கப்பட்ட பொருட்களை, தங்களின் உள்ளூர் தேவைக்கு ஏற்றபடி உருமாற்றி வெளியிடுபவர்கள்.

3) <u>காலம் கடத்தும் பழமைவாத தொழில் முனைவோர்</u>
- பழமை தொழில் முனைவோர்கள், எதையும் புதிதாக புகுத்துவதில் தயக்கம் காட்டுபவர்கள்.
- குறிப்பாக புதியது புகுத்தினால், இடர் வந்துவிடும் என அச்சம் கொள்பவர்கள்.
- தொழில் சூழ்நிலைகள் மாறிவரும் போதிலும் மாறாத இவர்கள், மாற்றத்தை வேறு வழி இல்லாத நிலையில், ஏற்க தள்ளப்படுபவர்கள்.
- அதாவது மாற்றத்தை உள்வாங்கவில்லை எனில், தொழிலை மூட வேண்டிய சூழ்நிலை ஏற்படும் என்றால் மட்டுமே மாற்றத்தை பின்பற்றுவார்கள்.
- உதாரணமாக நரசூஸ் காபி காலங்காலமாக காபித் தூளை மட்டும் தயாரித்து விற்பனை செய்து வந்தது. ஆனால் இன்று கால சூழ்நிலையால் அது பல்வேறு தரத்தில் காபித்தூளையும் மற்றும் ஆயத்த காபித் தூளையும் உற்பத்தியில் சேர்த்துக் கொண்டுள்ளது

4) <u>மந்தமான தொழில் முனைவோர் (அ) ஆண் தேனி தொழில் முனைவோர்</u>
- மந்தமான தொழில் முனைவோர்களும், பழமைவாத தொழில் முனைவோருக்கு நிகராக மாறுதல்களை ஏற்க விரும்பாதவர்கள்.
- இவர்கள் யாரும் நுழைய விரும்பாத அல்லது பெரிய நிறுமங்களால் புறக்கணிக்கப்பட்ட ஒரு சிறிய சந்தையில் செயல்படுபவர்கள்.
- அதாவது சிறிய குட்டையில் பெரிய மீனாக அரசாள்பவர்கள்.
- அந்த சிறுசந்தையில் எவ்விதமாற்றமும் செய்யாமல் அப்படியே இயங்குபவர்கள்.
- உதாரணமாக திருநெல்வேலி அல்வா வியாபாரம் செய்யும் இருட்டுக் கடைஅல்வா வியாபார நிறுமம் கடையில் கூட எந்தமாற்றமும் செய்யாமல், மிகப்பெரிய அளவில் வியாபாரம் செய்து வருகின்றனர்.

46. அ) **அரசின் ஏதேனும் ஐந்து தொழில் முனைவோர் மேம்பாட்டு திட்டத்தினை விளக்குக.**

1) <u>ஸ்டார்ட்டப் இந்தியா</u>
- தொடக்க நிலையில் உள்ள தொழில்களுக்கு ஆலோசனை வழங்குவது, வளர்ப்பது, ஆதரவு அளிப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் அவற்றை வளர்க்கும் திட்டத்தினை 2016 ம் ஆண்டு சனவரியில் துவங்கியது.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

2) <u>இந்தியாவில் தயாரிப்பு திட்டம்</u>
- இத்திட்டத்தின் மூலம் இந்தியாவை பன்னாட்டு உற்பத்தி மையமாக மாற்ற உதவி செய்யப்படுகிறது.
- இத்திட்டம் 2014 செப்டம்பர் மாதம் நடைமுறை படுத்தப்பட்டது.

3) <u>அடல் புதுமை புகுத்தல் திட்டம்</u>
- பன்னாட்டு தரத்திற்கு இணக்கமான முறையில், புதுமையான பொருட்களை வடிவமைப்பது மற்றும் தொழில் முனைவை முழுவீச்சில் ஊக்குவித்து அதை வளர்ப்பது என்ற முதன்மையான நோக்குடன் அடல் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

4) <u>பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டத்திற்கான ஆதரவு</u>
- ஊரகப் பகுதியில் உள்ள மகளிருக்கு முறைசார் பயிற்சியை நல்கும் நோக்குடன் மகளிர் மற்றும் சிறார் அமைச்சகம் இத்திட்டத்தை செயல் படுத்தியது.

5) <u>ஜன்தன் - ஆதார் - மொபைல்</u> Jan-Dhan-Aadhar-Mobile (JAM)
- இத்திட்டத்தின் மூலம், பல அரசுத் திட்டங்களில் பயன் பெற்று வரும் பயனாளிகளுக்கு சேரவேண்டிய மானியத்தை, அவர்கள பெயரில் வங்கிக்கணக்கு ஆரம்பிக்கப்பட்டு செலுத்தப்படுகிறது.

6) <u>இலக்குமுறை இந்தியா (OR) டிஜிட்டல் இந்தியா</u>
- இத்திட்டத்தின் மூலம் அனைத்து அரசின் சேவைகளும், பயனாளிகளுக்கு மின்னணு முறையில் வழங்கப்பட்டு வருகிறது.
- இதனால் இந்திய பொருளாதாரம், மின்னணு பொருளாதாரமாக மாறி வருகிறது.

7) <u>ஸ்டாண்ட் அப் இந்தியா</u> Stand-up India
- இத்திட்டத்தின் மூலம் பழங்குடியினர் மற்றும் தாழ்த்தப்பட் இனத்தைச் சார்ந்த மகளிருக்கு, நிறுமக் கடன் வழங்கி, அவர்களும் வளர்ந்து வரும் இந்தியப் பொருளாதாரத்தின் பலனை பெற்று அனுபவிக்க வகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

**( அல்லது )**

46 ஆ) **பங்குகளுக்கும், கடன் பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?**

| வ. எண் | கடன் பத்திரங்கள் | பங்குகள் |
|---|---|---|
| 1 | இது சட்டப்படி ஒரு கடன் ஆகும் | இது நிறுமத்தின் முதலில் ஒரு பங்கு ஆகும் |
| 2 | கடன் பத்திரதாரர்கள் நிறுமத்தின் கடனீந்தோர்கள் ஆவர் | பங்குதாரர்கள் நிறுமத்தின் உறுப்பினர்கள் / உரிமையாளர்கள் ஆவர் |
| 3 | கடன் பத்திரதாரர்கள் நிலையான விகிதத்தில் வட்டி செலுத்தி அதற்கான பங்காதாயம் பெறுவர் | பங்குதாரர்கள் மாறுபடும் விலையில் பங்காதாயம் பெறுவர் |
| 4 | நிறுமத்தின் சொத்துகளின் மீது கடன் பத்திரங்கள் விதிக்கப்படும் | பங்குகளில் எந்தவிதமான விதிப்பும் கிடையாது |
| 5 | கடன் பத்திரங்களின் வட்டி வீதம் நிலையானது | இயக்குநர் அவையின் முடிவின் அடிப்படையிலும், இலாபத்தின் அடிப்படையிலும் பங்காதாயம் வீதம் மாறும் |
| 6 | கடன் பத்திரதாரர்கள் வாக்களிக்கும் உரிமை இல்லை | பங்குதாரர்களுக்கு வாக்களிக்கும் உரிமை உண்டு |
| 7 | கடன் பத்திரங்கள் ஒதுக்கீட்டு முறையை, பதிவு செய்ய எந்த ஆவணமும் இல்லை | பங்குகளின் ஒதுக்கீடு தொடர்பான விபரங்களை E - FORM NO. 2 ல் பதிவு செய்ய வேண்டும் |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**47. அ) இயக்குனர்களின் அதிகாரங்கள் யாவை?**

A. <u>சட்டப்படியான அல்லது சட்டபூர்வமான அதிகாரங்கள்</u>

1) பங்குதாரர்களிடம் இருந்து வரவேண்டிய பங்குகள் மீதான செலுத்தப்படாத அழைப்புகளை பெறுவதற்கான அதிகாரம்
2) கடன் பத்திரங்களை வெளியிடுவதற்கான அதிகாரம்
3) கடனீட்டுப் பத்திரம் நீங்கலாக, இதர வழிகளில் கடன் வாங்குவதற்கான அதிகாரம்
4) நிறுமத்தின் நிதியை முதலீடு செய்யும் அதிகாரம்
5) புதிய கடன்களை உருவாக்கும் அதிகாரம்
6) நிறுமத்தின் வியாபாரத்தை பல்வகைப்படுத்தும் அதிகாரம்

B. <u>மேலாண்மை அல்லது நிர்வாக ரீதியான அதிகாரங்கள்</u>

i) மூன்றாம் நபருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளும் அதிகாரம்.
ii) பங்கு மாற்றம் செய்யும் அதிகாரம்
iii) கடன் பத்திரங்களை வெளியிட வேண்டிய விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் முடிவு செய்யும் அதிகாரம்
iv) புதிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கும், வணிகத்தை செயல்படுவதற்கான வழிமுறைகளை உருவாக்கும் அதிகாரம்
v) கம்பெனியில் நிர்வாக இயக்குனர், மேலாளர் மற்றும் கம்பெனி செயலரை நியமனம் செய்யும் அதிகாரம்
vi) தன்கீழ் பணியாற்றும் ஊழியர்களை மேற்பார்வை செய்தல் மற்றும் கட்டுப்படுத்தும் அதிகாரம்

C. <u>தீர்மானத்தின் மீது இயக்குனர்களின் அதிகாரங்கள்</u>

1) கம்பெனியின் எந்த ஒரு சொத்தையும் விற்க அல்லது குத்தகைக்கு விடும் அதிகாரம்
2) கடனை திரும்ப செலுத்த இயக்குனருக்கு தேவையான காலத்தை அனுமதிக்கும் அதிகாரம்
3) செலுத்தப்பட்ட மூலதனம் மற்றும் காப்புகள் ஆகியவற்றின் கூட்டுத் தொகைக்கு மேல் கடன் வாங்கும் அதிகாரம்
4) ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக ஒரு நபரை, முகவராக நியமனம் செய்யும் அதிகாரம்
5) மிகை ஊதிய பங்குகளை வெளியிடுதல் மற்றும் பங்கு மூலதனத்தை மறுசீரமைப்பு செய்தல் தொடர்பான அதிகாரம்

D. <u>இதர அதிகாரங்கள்</u>

1. சாதாரண காலிப்பணியிடங்களை நிரப்பும் அதிகாரம்
2. நிறுமத்தின் முதல் தணிக்கையாளர் நியமிக்கும் அதிகாரம்
3. மாற்று இயக்குனர்கள், கூடுதல் இயக்குனர்கள் மற்றும் முக்கிய நிர்வாக அதிகாரிகளை நியமிக்கும் அதிகாரம்
4. முக்கிய நிர்வாக அல்லது மேலாண்மை அதிகாரிகளை நீக்கும் அதிகாரம்
5. பங்குகளுக்கான இடைக்கால மற்றும் இறுதி வளத்தை பரிந்துரை செய்யும் அதிகாரம்
6. நிறுமத்தின் கடன் தீர்க்கும் நிலைமையை அறிவிக்கும் அதிகாரம்
7. அரசியல் அமைப்புக்கு பங்களிப்பு செய்யும் அதிகாரம்

**( அல்லது )**



**47 ஆ) பலவகையான நிறும கூட்டங்களை விளக்கு.**

1. <u>பங்குநர்கள் கூட்டம்</u>

❖ நிறும பங்குநனர்களால் நடத்தப்படும் கூட்டங்கள், பங்குனர்கள் கூட்டம் என அழைக்கப்படுகிறது.
❖ நிறும பங்குநர் கூட்டங்களை மூன்று வகையாக பிரிக்கலாம்.

1) <u>சட்டமுறை கூட்டம்</u>

❖ ஒரு பொது நிறுமத்தின் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே கூட்டப்படும் கூட்டம் சட்டமுறை கூட்டம் ஆகும்
❖ பொது நிறுமமும் தொழில் தொடங்கிய தேதியிலிருந்து ஒரு மாதத்திலிருந்து 6 மாதத்திற்குள் பங்குனர்கள் கூட்டத்தை கூட்ட வேண்டும்.
❖ இதனை சட்டமுறை கூட்டம் என அழைக்கப்படுகிறது.

2) <u>ஆண்டுப் பொதுக் கூட்டம்</u>

❖ ஒவ்வொரு ஆண்டும் நிறுமத்தில் இயல்பான நடவடிக்கை குறித்து ஆலோசிக்க கூட்டப்படும் கூட்டம் ஆண்டு பொதுக் கூட்டம் ஆகும்.
❖ இக்கூட்டம் நிறுமம் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 18 மாதத்திற்குள், முதல் ஆண்டு பொதுக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
❖ அடுத்த ஒவ்வொரு ஆண்டும், இக்கூட்டத்தை கூட்ட வேண்டும்.
❖ இரண்டு ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு இடைப்பட்ட காலம் 15 மாதத்திற்கு மிகையாக கூடாது.

3) <u>சிறப்புக் கூட்டம்</u>

❖ சட்டமுறைக் கூட்டம் மற்றும் ஆண்டு பொதுக்கூட்டம் ஆகிய இரண்டையும் தவிர, பிறக் கூட்டங்கள் அனைத்தும் சிறப்பு கூட்டங்கள் என அழைக்கப்படுகிறது.
❖ சில அவசர வியாபார முடிவுகளை எடுக்க, இரு ஆண்டு பொதுக் கூட்டங்களுக்கு இடையே கூட்டப்படும் இதர கூட்டங்கள் அனைத்தும் சிறப்புக் கூட்டளாகும்.

2. <u>இயக்குநர் அவைக் கூட்டம்</u>

❖ நிறுமத்தின் நடவடிக்கைகள் குறித்து இயல்பான முடிவுகளை எடுத்பதற்காக இயக்குனர்களால் கூட்டப்படும் கூட்டம் இயக்குநரவை கூட்டம் ஆகும்.
❖ இயக்குரவை முதல் கூட்டம், நிறும பதிவு செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் கூட்டப்பட வேண்டும்

<u>வாரியக்குழுக் கூட்டம்</u>

❖ பட்டியலிடப்பட்ட நிறுமமும் ரூபாய் 10 கோடி அல்லது அதற்கு மேல் பங்கு முதலுடைய ஒவ்வொரு பொது நிறுமம், தணிக்கை குழு கூட்டத்தை கூட்ட வேண்டும்.
❖ இக்கூட்டம் ஆண்டுக்கு, குறைந்தது நான்கு முறை கூட்ட வேண்டும்.

3. <u>சிறப்புக் கூட்டங்கள்</u>

a. <u>வகுப்பு கூட்டம்</u>

❖ ஒரு குறிப்பிட்ட வகையான பங்குககள் அல்லது கூட்டங்கள், குறிப்பிட்ட வகையான கடனீட்டுப்பத்திரங்களும், கூட்டப்படும் கூட்டம், வகுப்பு கூட்டம் ஆகும்.

b. <u>கடனீந்தோர் கூட்டம்</u>

❖ நிறுமக் கூட்டங்களை போல இது ஒரு நிறும கூட்டம் அல்ல.
❖ இருப்பினும், இது ஒரு புதிய கடன் கொள்கையை அறிமுகம் செய்யும் போது அல்லது கடனீந்தோர்கள் தொடர்பான சில வழக்குகளை பேசி முடிவு எடுக்கவும், கடனீந்தோர்களுடன் சில ஒப்பந்தங்கள் மேற்கொள்ளவும் இவ்வகை கூட்டங்கள் கூட்டப்படுகிறது